بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/08/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில் நடந்த போர்களைப் பற்றிய குறிப்பு கூறப்பட்டு வருகின்றது. அவற்றில் ஒன்று ஜந்திஷாபூர் போராகும். ஷாபூர் குஜெஸ்தானுடைய ஒரு நகரமாகும். ஹஸ்ரத் அபூ ஸப்ரஹ் பின் ரஹ்ம் ஸாஸானி கிராமப் பகுதிகளை வென்ற பிறகு படையுடன் முன்னேறிச் சென்றார்கள். இரவு பகலாக எதிரிகளுடன் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் எதிரி தன் இடத்திலிருந்து அசையவில்லை. ஒருநாள் ஒரு சாதாரண முஸ்லிம் சார்பாக பாதுகாப்பு வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது. அதை எதிரிகள் உடனடியாக ஏற்றுக் கொண்டு நகரத்தின் வாயில்களை திறந்து விட்டார்கள். முஸ்லிம்கள் எதிரிகளிடம் உங்களுக்கு என்ன நேர்ந்தது என்று கேட்டபோது, அவர்கள் நீங்கள் எங்களுக்கு பாதுகாப்பை வழங்கி விட்டீர்கள்; நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம் என்று கூறினார்கள். நாங்கள் அவ்வாறு செய்யவில்லையே என்று முஸ்லிம்கள் கூறினார்கள். பிறகு விசாரித்ததில் ஓர் அடிமை சார்பாக இவ்விஷயம் கூறப்பட்டது தெரியவந்தது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை பற்றி எடுத்துரைத்து கூறுகின்றார்கள்:** இவ்விஷயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்ததும், ஒரு நம்பிக்கையாளர் வாக்குறுதி கொடுத்துவிட்ட பிறகு அதைப் பொய்யாக்க என்னால் முடியாது. இப்போது அந்த கருப்பினத்தவர் செய்த உடன்படிக்கையை நீங்கள் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஆயினும், இனிமேல் கமாண்டர் இன் சீஃப்பைத் தவிர வேறு எவரும் எந்த சமுதாயத்துடனும் உடன்படிக்கை செய்யக் கூடாது என அறிவிப்பு செய்து விடுங்கள் என்று கூறினார்கள்.

ஈரானின் வெற்றிக்கான காரணங்கள் குறித்து இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது: ஈராக் மற்றும் அஹ்வாஸுடனான போர்களோடு, இந்த இரத்தம் சிந்தும் போர் முடிவுக்கு வர வேண்டும் என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நெஞ்சார்ந்த விருப்பமாக இருந்தது. ஆனால் ஈரானிய அரசின் தொடர்ச்சியான போர் நடவடிக்கைகள் அன்னாருடைய இந்த நோக்கத்தை நிறைவேற விடவில்லை. ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் போர்க்களத்திலிருந்து படைத் தளபதிகளின் ஒரு கூட்டம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தது. வெற்றி பெற்ற பகுதிகளில் அடிக்கடி கலகம் ஏற்படுவதன் காரணத்தை அன்னார் கேட்டார்கள். வெற்றிபெற்ற பகுதிகளில் உள்ள குடிமக்களுக்கு துன்பம் ஏற்படக் காரணமாக நிச்சயம் முஸ்லிம்கள் இருப்பார்கள் என்ற தம்முடைய சந்தேகத்தை வெளிப்படுத்தினார்கள். அனைத்துத் தளபதிகளும் இவ்விஷயத்தை மறுத்தார்கள்.

அஹ்னஃப் பின் கைஸ் அவர்கள் கூறினார்கள்: அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் எங்களை மேலும் முன்னேறுவதில் இருந்தும் தடுத்துவிட்டீர்கள். ஆனால் ஈரானிய மன்னன் உயிருடன் இருக்கும் வரை அவர்கள் நம்முடன் போர் செய்து கொண்டே இருப்பார்கள். தங்களது கட்டளைக்கேற்ப எந்தப் பகுதிகளையும் நாங்களாகவே

கைப்பற்றவில்லை. மாறாக எதிரிகள் தாக்குதல் தொடுத்ததனால் வெற்றி கண்டோம். தாங்கள் எங்களுக்குப் படை திரட்டிச் சென்று பாரசீகத்தின் மன்னனை வெளியேற்ற அனுமதி தராதவரை எதிரிகளின் இந்த நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த ஆலோசனையை உகந்ததாக கருதினாலும்கூட, அதன்படி செயல்படும் தீர்மானத்தை அன்னார் ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டு நஹாவந்தின் போருக்குப் பிறகே செயல்படுத்தினார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* காரணமின்றி போர் புரிவதை ஆகுமானது என்று கூறுகின்ற முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்ற மக்கள் இருவருக்குமான பதில் இங்கு வந்துவிட்டது. அதாவது முஸ்லிம்கள் ஒருபோதும் நிலங்களைப் பெறுவதற்காகவோ அல்லது தேசங்களை வெல்வதற்காகவோ போர்கள் புரியவில்லை.

ஈரானிய வெற்றிகளில் காதிஸிய்யா, ஜலூலா மற்றும் நஹாவந்து ஆகிய மூன்று போர்களுக்கும் 'தீர்ப்பை வழங்கிய போர்' எனும் அந்தஸ்து கிடைத்துள்ளது. நஹாவந்து போர் ஈரானியர்களின் தரப்பிலிருந்து தாக்குதலின் இறுதி முயற்சியாக இருந்தது. நஹாவந்து ஹம்தான் மாநிலத்தின் தலைநகரமான ஹம்தானிலிருந்து சுமார் 70 கிலோமீட்டர் தெற்கில் அமைந்துள்ளது. ஈரானிய மன்னன் யஸ்தகிர்து மிகவும் துரிதமாக முஸ்லிம்களை எதிர்ப்பதற்காகத் தன்னுடைய கடிதங்களின் வாயிலாக குராஸானிலிருந்து ஸிந்து வரை ஒரு கலகத்தை உருவாக்கியிருந்தான். எல்லாத் திசையிலிருந்தும் முண்டியடித்துக் கொண்டு ஈரானிய படை நஹாவந்தில் ஒன்று திரண்டது. ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் இப்படை குறித்த தகவலை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களைப் பொறுப்பிலிருந்து விடுவித்து இந்த முக்கிய பொறுப்பை ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். மதீனாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனைக்காகப் பெரும் கண்ணியமிக்க சஹாபாக்களை ஒன்று திரட்டினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹிஜாஸின் படைகளுடன் தாங்களே புறப்பட வேண்டும் என்றும் சிரியா, ஏமன் மற்றும் கூஃபாவிலிருந்து படைகளை நஹாவந்துக்கு வரவழைக்குமாறும் ஆலோசனை வழங்கினார்கள். மற்ற சஹாபாக்களுக்கோ இந்த ஆலோசனை பிடித்துவிட்டது. இருந்தாலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்கள். அதாவது ஒருவேளை தாங்கள் சுயமே புறப்பட்டு விட்டால் முஸ்லிம்கள் தங்களுடன் சேர்ந்து போரிடுவதற்காக (நாடெங்கிலும் இருந்து) முண்டியடித்துக் கொண்டு வருவர். இவ்வாறு (நாடு காலியாகிவிடும்) இங்கு ஒரு பெரும் அபாயம் உருவாகிவிடும். எனவே தாங்கள் முஸ்லிம் மாநிலங்களுக்கு அவர்கள் படையின் ஒரு பகுதியை ஈரானுக்கு அனுப்பி வைத்து, எஞ்சிய படை தத்தமது பகுதிகளில் பாதுகாப்பிற்காக இருக்கும்படியாகத் தகவல் அனுப்புங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த ஆலோசனை பிடித்துவிட்டது. அன்னார் ஹஸ்ரத் நுஃமான் பின் முக்ரின் (ரலி) அவர்களைப் படைத்தளபதியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூஃபாவிலிருந்த ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்: பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். நுஃமான் பின் முக்ரின் அவர்களுக்கு! சலாமுன் அலைக்க. பிறகு எழுதினார்கள்: நான் அல்லாஹ்வைப் புகழ்கிறேன். அவனையன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. விஷயம் என்னவென்றால், ஈரானியர்களின் பெரும்படை ஒன்று நஹாவந்து நகரில் உங்களை எதிர்க்க ஒன்று திரண்டுள்ளது என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. என்னுடைய இந்தக் கடிதம் உங்களுக்கு கிடைத்ததும் இறைவனுடைய கட்டளை மற்றும் அவனது உதவி ஒத்துழைப்புடன் உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விடுங்கள். ஆனால் அவர்களை நடப்பதற்குக் கடினமாக இருக்கின்ற வரண்ட பகுதிகளில் அழைத்துச் செல்லாதீர்கள். அவர்கள் நன்றிகேடு காட்டுபவர்களாக ஆகாமலிருக்க

அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதில் எந்தக் குறையும் வைத்துவிடாதீர்கள். மேலும் அவர்களை எவ்வித புதைமணல் இருக்கின்ற பகுதிகளிலும் அழைத்துச் செல்லாதீர்கள். ஏனெனில் ஒரு முஸ்லிம் எனக்கு ஒரு இலட்சம் தினாரை விட அதிக நேசத்திற்குரியவர் ஆவார். வஸ்ஸலாமு அலைக்க.

இந்த கட்டளையை செயல்படுத்தியவாறு ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் எதிரிகளை எதிர்த்துப் போரிட புறப்பட்டார்கள். அன்னாருடன் சில மேன்மை மிக்க மற்றும் தைரியமான முஸ்லிம்களும் இந்தப் போரில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு வழிகாட்டினார்கள்: நுஃமான் ஷஹீது ஆகிவிட்டால் ஹுஸைஃபா பின் யமான், அவர்களுக்குப் பிறகு ஜரீர் பின் அப்தில்லாஹ் பஜலி, அவர்களுக்குப் பிறகு முகைரா பின் ஷுஅபா பிறகு அஷ்அஸ் பின் கைஸ் ஆகியோர் அமீராக இருக்கட்டும். ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் ஒற்றர்களின் வாயிலாக நஹாவந்து வரை வழிப்பாதை தடையின்றி உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டார்கள். வரலாற்றாசிரியர்கள் ஈரானிய படையின் எண்ணிக்கை 60 ஆயிரம் என்றும் ஒரு இலட்சம் என்றும் எழுதியுள்ளார்கள். ஆயினும் புகாரியில் எண்ணிக்கை 40,000 பேர் என்று கூறப்பட்டுள்ளது.

எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க பேச்சுவார்த்தை நடத்த ஹஸ்ரத் முகைரா பின் ஷுஅபா சென்றார்கள். ஈரானியர்கள் மிகவும் சிறப்புமிக்க சபையை ஏற்படுத்தி இருந்தார்கள். ஈரானிய படைத்தளபதி பழைய வழக்கத்திற்கு ஏற்ப அரேபியர்களின் வாழ்க்கை முறையின் அனைத்து அம்சங்களையும் ஏளனப்படுத்தி கூறினான். ஹஸ்ரத் முகைரா (ரலி) அவர்கள் பதிலுக்கு, தற்போது அந்த காலகட்டம் சென்றுவிட்டது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வருகையானது அரேபியாவின் நிலையை மாற்றிவிட்டது என்று கூறினார்கள். எவ்வாறு ஆகிலும் இந்த பேச்சுவார்த்தை பலன் தரவில்லை.

போரின் ஆரம்பத்தில் மோதல் ஏற்பட ஆரம்பித்ததும் போர்க்களத்தின் சூழ்நிலை முஸ்லிம்களுக்கு மிகவும் இழப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. எதிரிகள் அகழிகள், கோட்டைகள் மற்றும் கட்டடங்களின் காரணத்தால் பாதுகாப்பாக இருந்தார்கள். முஸ்லிம்கள் திறந்தவெளி மைதானத்தில் இருந்தார்கள். எதிரிகள் உகந்த தருணம் பார்த்து வெளியே வந்து திடீரென தாக்குதல் தொடுத்து விடுவார்கள். இந்த இக்கட்டான தருவாயில் இஸ்லாமிய படைத்தளபதி நுஃமான் பின் முக்ரின் (ரலி) அவர்கள் ஆலோசனைக்காக சபையைக் கூட்டினார்கள். பல்வேறு ஆலோசனைகளுக்குப் பிறகு துலைஹா சார்பாக இந்த ஆலோசனை முன்வந்தது: எதிரியை நோக்கி ஒரு சிறிய படையை அனுப்ப வேண்டும். அவர்கள் அம்பு எய்வதன் மூலமாக போரை தீவிரப்படுத்த வேண்டும். எதிரி எதிர்த்துப் போரிட வெளியே வரும்போது, அந்தச் சிறிய படை பின் வாங்குவது போன்று நடந்து கொள்ள வேண்டும். வெற்றியின் பேராசையில் எதிரிகள் மேலும் முன்னேறி வருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அவர்கள் வெளியே திறந்த மைதானத்தில் வந்துவிட்ட பிறகு நாம் வலுவாக அவர்கள் மீது பாய்ந்து தாக்கி விட வேண்டும்.

ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் (ரலி) இந்த ஆலோசனையை செயல்படுத்துவதற்காக ஹஸ்ரத் கஃகாஃ (ரலி) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் துலைஹாவின் ஆலோசனைப்படி செயல்பட்டதும் துலைஹா அவர்கள் நினைத்தது போன்றே நடந்தது. ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களை மிக அதிகமாக நேசிப்பவராக இருந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்களின் நடைமுறை இவ்வாறாக இருந்தது. அதாவது ஒரு வேளை காலையில் போர் ஆரம்பிக்கவில்லை எனில் பிறகு பகல் நிறைவு பெற்றதும் போருக்கான நடவடிக்கை மேற்கொள்வார்கள். எதிரிகளின் படை முன்னேறியவாறு இஸ்லாமிய படைக்கு அருகில் வந்ததும் பல முஸ்லிம் படைவீரர்கள் நிம்மதி இழந்தவர்களாக எதிர்த்துப் போரிட ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களிடம் அனுமதிகோர சென்றார்கள். ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் அனுமதி வழங்கவில்லை. அப்போது பல முக்கிய தலைவர்களும் எதிர்த்துப் போரிட அனுமதி வழங்குமாறு அன்னாருக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஆனால் அன்னார் பொறுமை காக்கும்படி கூறிவந்தார்கள்.

பகல் சாய்ந்த பிறகு ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் படை முழுவதையும் சுற்றி வந்தார்கள். பிறகு வேதனை மிகு வார்த்தைகளால் சொற்பொழிவாற்றினார்கள். தம்முடைய ஷஹாதத்திற்காக துஆ செய்தார்கள். அதைக் கேட்டு மக்கள் அழத் தொடங்கினர். சமயோசிதமான நடவடிக்கைகளால் சந்தர்ப்பம் கிடைத்ததும் முஸ்லிம்கள் எதிரிகளின் படைவரிசை மீது சீறிப் பாய்ந்தார்கள். ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் மிகவும் தைரியத்துடன் போரிட்டு ஷஹீதானார்கள். ஆனால் ஹஸ்ரத் ஹுஸைஃபா பின் யமான் மற்றும் நயீம் பின் முக்ரின் ஆகியோர் போர் முடிவடையும் வரை அன்னார் ஷஹீதான விஷயத்தை மறைத்து வைத்தார்கள். மற்றுமோர் அறிவிப்பில் முஅக்கில் கூறுகிறார்கள்: வெற்றிக்குப் பிறகு நான் ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களிடம் வந்தேன். அவர்கள் உயிருடன் தான் இருந்தார்கள். என்னிடம் அன்னார் கேட்டதனால் நான் அல்லாஹ்வின் புறமிருந்து வெற்றி கிடைத்து விட்டது என்று கூறினேன். அதனைக் கேட்டு அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் தகவல் கொடுத்துவிடும்படி கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போரின் முடிவை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். எந்த இரவில் போர் நடக்கும் என்று எதிர்பார்ப்பு இருந்ததோ அந்த இரவை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் நிம்மதி இழந்தவர்களாக விழித்துக்கொண்டு மன்றாடி துஆ செய்து கழித்தார்கள். அன்னார் ஒரு கர்ப்பிணிப் பெண் வேதனையில் இருப்பதைப் போன்று வேதனையுடன் துஆவில் மூழ்கியிருந்தார்கள் என்று அறிவிப்பாளர் கூறுகிறார். செய்தி கொண்டு வருபர் வெற்றியின் நற்செய்தியுடன் மதீனா சென்றடைந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினார்கள். மேலும் நுஃமான் அவர்களது நலனை விசாரித்தார்கள். செய்தி கொண்டு வருபர் அன்னாரது வஃபாத்தின் செய்தியைக் கூறியதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மிகுந்த துன்பம் ஏற்பட்டது. தலையில் கை வைத்தவாறு அழுதுகொண்டிருந்தார்கள். செய்தி கொண்டு வருபர் மற்ற ஷஹீதுகளின் பெயர்களைக் கூறினார். மேலும் அமீருல் முஃமினீன் அவர்களே! இன்னும் பல முஸ்லிம்கள் ஷஹீதாகியுள்ளார்கள் அவர்களைத் தங்களுக்குத் தெரியாது என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுதவாறு உமருக்கு அவர்களைத் தெரியாது என்றால் அதனால் அவர்களுக்கு எந்த இழப்பும் இல்லை. இறைவன் அவர்களை அறிந்திருக்கிறானே என்று கூறினார்கள். முஸ்லிம்கள் மத்தியில் அவர்கள் அறிமுகம் இல்லாதவர்களாக இருக்கலாம். ஆயினும் இறைவன் அவர்களுக்கு ஷஹாதத்தை வழங்கி கண்ணியப்படுத்தி விட்டான். அல்லாஹ் அவர்களை அறிந்திருக்கிறான். உமர் அவர்களை அறிவதில் என்ன இருக்கிறது என்று கூறினார்கள்.

போருக்குப் பிறகு முஸ்லிம்கள் ஹம்தான் வரை எதிரிகளை விரட்டிச் சென்றார்கள். இதனை கண்ட ஈரானிய தலைவன் ஹுஸ்ரு ஷனூம், ஹம்தான் மற்றும் ரஸ்தகி ஆகிய நகரங்களின் சார்பாக அவர்களுடைய நகரங்களிலிருந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படமாட்டாது என்ற நிபந்தனைக்குட்பட்டு சமரசம் செய்து கொண்டான். இஸ்லாமிய படை நஹாவந்து நகரத்தைக் கைப்பற்றியது. தனது விளைவைப் பொறுத்தவரை நஹாவந்து வெற்றி மிகவும் முக்கியமானதாக இருந்தது. அதற்குப்பிறகு ஈரானியர்களுக்கு ஓரிடத்தில் ஒன்றுகூடி போரிட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. முஸ்லிம்கள் அவ்விடத்தை வெற்றிகளுக்கெல்லாம் (பெரிய) வெற்றி என்று பெயர் சூட்டி நினைவு கூர ஆரம்பித்தனர். நஹாவந்துக்குப் பிறகு முஸ்லிம்கள் அஸ்ஃபஹான் மற்றும் ஹம்தானை வென்றார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் அவர்கள் (அய்யதஹுல்லாஹ்) இந்தோனேஷியாவின் முபல்லிக் மதிப்பிற்குரிய முஹம்மது தியான்துனோ ஸாஹிப் அவர்கள், அமெரிக்காவின் ஷிகாகோவை சார்ந்த மதிப்பிற்குரிய ஸாஹிப்ஸாதா ஃபர்ஹான் லத்தீஃப் ஸாஹிப் அவர்கள் மற்றும் பாக்கிஸ்தானில் உள்ள லாகூரைச் சேர்ந்த தாவூது ஹைல் மாவட்டம், மியான்வாலி எனும் ஊரின் அமீர் ஜமாஅத் மதிப்பிற்குரிய மலிக் முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிப் அவர்கள் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா காயிப் தொழுகையை நடத்துவதாக அறிவித்தார்கள்.*

**(தமிழாக்கம்: மௌலவி முஹம்மது சுல்தான் மைதீன்)**